# வெள்ளி வீதியாரும் வெளிப்படை உடல் அரசியலும் அகக்கோட்பாட்டை முன் வைத்து

*க. ஈஸ்வரன்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கே ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6468

*பிரதியாக்கத்தில் தொல்காப்பியம் தமிழ் அறிவு மரபின் உச்சம் ஆகும். ஏனெனில் இப்பிரதி நவீன சிந்தனைகள் பலவற்றுடன் பொருந்திப் போவதாக இருக்கிறது. தமிழ்ச்சமுகத்தின் பண்பாட்டு வரலாற்றை தெரிவு படுத்துவதற்கு தொல்காப்பியம் முதன்மையாக விளங்குகிறது. 19ம் நூற்றாண்டில் தமிழகத்தில் பரவலான அச்சுப் பண்பாட்டின் வழியாகத் தொல்காப்பியப் பனுவலை தமிழ் சமுகம் பல்வேறு கோணங்களில் உள்வாங்கியது. மேலைநாட்டின் அறிவுலகின் கவனத்தையும் தமிழின்பால் ஈற்கவும் முற்பட்டது. இதற்கு அடிப்படை காரணம் அகம், புறம் என்ற ஆழமான கோட்பாடுகளே ஆகும். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் புறத்தை விட அகம் என்ற பொருண்மையே அதிகமாகப் பேசப்பட்டு வருகின்றது. அந்நிலையில் இக்கட்டுரையில் காலம் தோறும் அகம் என்ற பொருண்மை எவ்வாறு இலக்கியங்களில் (வெள்ளிவீதியார் பாடல்களில்) உள்வாங்கப்பட்டுள்ளது என்றும் அகத்தின் பரிணாமம் எவ்வாறு வெள்ளிவீதியார் பாடல்களில் உடல்சார்ந்த பொருண்மைகளில் பயணப்படுகின்றது என்றும் இக்கட்டுரை இலக்கியச்சான்றுகளை முன்வைத்து அமைகின்றது.*

*உடல் தான் நமக்கு இருக்குற ஒரே ஆயுதம் இது காலா திரைப்படத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினியின் வசனம். இன்று ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்திற்கான ஆயுதமாக உடல் பயன்படுத்தப்பட்டு வருவது கண்கூடு. இன்று பெண்ணியலாளர்கள் பலராலும் பெண் உடலரசியல் பேசப்பட்டு வருகிறது. தங்கள் உடல் ஆணுக்கான போகப்பொருள் அல்ல. அது எங்கள் உடல். அதன் மீது ஆணுக்கு அதிகாரமில்லை என்ற பெண்ணியக்குரல் பெண் கவிஞர்களின் கவிதைகளில் காணமுடிகிறது. இந்தியச் சூழலில் கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களைக் காரணம் காட்டி பெண் அனுபவங்கள் திரைக்குப்பின்னே மூடி மறைக்கப்படுகிறது.*

இந்த மூடு திரை அண்மைக் காலங்களில் கவிதையின் விலக்கப்பட்டு, பெண் உடல் புதிய அரசியலைக் கட்டமைக்கப் பயன்படுகிறது என்ற அரங்கமல்லிகாவின் கருத்து பெண் உடல் சார்ந்த உரிமைகள், அதிகாரமின்மை பெண் கவிதைகள் மூடி மறைக்கப்பட்ட நிலையை உணர்த்து வதன் பின்னணியில், சங்கப் பெண் கவிஞர்கள் தங்களது உடலை முன்னிறுத்தி எதிர்ப்புகளை அல்லது இயலாமையைப் பதிவு செய்துள்ளார்களா? என்பதை பின்வறுமாறு காணலாம்.

**அகம்**

உலக வளர்ச்சிக்கு அன்பின் தொடர்பு இன்றியமையாதது. அந்த அன்பானது இரண்டு உயிர்களின் தனித்தனி நிலையில் உண்டாவதில்லை. அவை ஆண், பெண் என்ற இடண்டின் கூட்டுறவால் நிலவும் வாழ்வியல் முறையாகும். பழம்தமிழர் வாழ்வியலில் அகம் என்பது மீமாநுட உயிரிகளின் வாழ்வியல் அடிப்படையை உள்வாங்கி உணர்த்திய/உணர்த்தும் வாழ்வின் ஒரு பகுதியாகும். இக்கோட்பாடு முதன்மை இலக்கணமான தொல்காப்பியம் தொடங்கி நவீன இலக்கியங்களான நாவல், சிறுகதை, கவிதை போன்ற இலக்கிய வடிவங்கள் வரையிலும் நீடிக்கின்றது.

இவ்வாறு பேசப்படுகின்ற அகம் என்ற சொல்லுக்கு உரையாசிரியர் இளம்பூரணார் அவர்கள் அகம் என்பது காரணப்பெயர் என்றும் இது போகநுகர்ச்சி ஆதலாலும் அதனால் வினையும் பயனைத் தானே அறிதலாலும் அகம் எனப்பட்டது என்று கூறுகிறார்.

வாழ்வின் அகம் சார்ந்த பகுதி அகத்திணை என்றும், இலக்கியங்கள் இது பற்றி பேசும் போது அதனை அகப்பொருள் என்றும் கூறுகின்றது. மனிதருடைய அகவாழ்க்கையில் பல்வேறு நிலைகள் காணப்படுகின்றன. பண்டைய தமிழ் இலக்கியங்கள் இந்நிலைகளை நிலப்பிரிவுகளுடனும், காதலுடனும், இயற்கையுடனும் தொடர்பு படுத்தி கையாளுகின்றனர். இந்த இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அகவாழ்வைப் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கள், ஊடல், கைக்கிளை, பெருந்திணை என ஏழு வகையாக உரிப்பொருள் வகுத்து விளங்குகிறது. தமிழ் இலக்கணம் ஐந்து திணை அடிப்படையில் களவு/ கற்பு என அக வாழ்வினை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கின்றது. இவ்விரண்டு தன்மையும் ஏனைய இலக்கியங்களில் உட்புகுந்து பல்வேறு கருத்தமைவுகளை ஏற்படுத்துகின்றன.

இத்தகைய அகத்தினை மனம், உட்புறம், வீடு, கர்வம், அகந்தை, ஊடல், உள்ளம், மனை, இடம், பாவம், உயிர்களின் உணர்ச்சி என்று பல்வேறு பொருள்களிலும் அகராதிகளிலும் இலக்கியங்களிலும் கூறப்படுகின்றது.

**அகம் உரைக்கும் இலக்கணங்கள்**

- தொல்காப்பியம் - பொ.ஊ.மு (பொது ஊழிகாலத்திற்கு முன்)
- வீரசோழியம் - கி.பி 11
- இறையனார் அகப்பொருள் விளக்கம் - கி.பி 7 (இருக்கலாம்)
- நம்பி அகப்பொருள் - கி.பி 12
- களவியற்காரிகை - கி.பி 14
- தமிழ்நெறி விளக்கம் - கி.பி 12
- மாறனலாங்காரம் - கி.பி 16
- இலக்கணவிளக்கம் - கி.பி 17
- தொன்னூல் விளக்கம் - கி.பி 18முத்து வீரியம் - கி.பி 19
- சுவமிநாதம் - கி.பி 19
- அறுவகை இலக்கணம் - 19ஆம் நூற்றாண்டு

இத்தகைய இலக்கணப் பனுவல்களில் அகம் குறித்தான இலக்கணங்கள் அதிகம் பெசப்படுகின்றன.

**சங்க இலக்கியங்களில் அகம் நாகரிகம்**

தொன்மை வாய்ந்த நூலான தொல்காப்பியம் கோட்பாட்டுத் திறனாய்வு நூலாகத்

திகழ்கின்றது. தொல்காப்பியர் சொற்க்களை குறியிட்டாக்கம் செய்து அவற்றை கோட்பாடாக கட்டமைக்கின்றார். இலக்கிய கோட்பாடு என்பது இலக்கியத்தில் பொதுமை ஆக்கக்கூறுகளை விளக்குவதாக அமையும். இலக்கியத்தின் பொதுமைப் பண்புகள் புனைவமைக்கப்பட்டிருக்கும் நெறியினை விளக்குவதாகவே கோட்பாடு அமைகின்றது. தொல்காப்பியம் பொருளதிகாரம் இலக்கிய கோட்பாடுகளை விளக்குவதாக அமைகின்றது. இக்கோட்பாடில் அகம் என்பது சங்கைலக்கியங்களில் எவ்வாறு தந்து பங்களிப்பை செலுத்தியிள்ளது என்று காணலாம்.

***மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்***
***சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்***

சங்க இலக்கியங்கள் பெரும்பான்மையும் தலைவன், தலைவி உள்ளக்கிடைக்கைகளை எடுத்தியம்புவதக அமைகின்றன. அவ்வகையில் உடலரசியல் பற்றி 'ஜமாலன்', உடலரசியல் என்பது ஒரு உடல் எப்படி அதிகார அமைப்பால் கட்டப்பட்டுள்ளது என்பதையும், அதிலிருந்து அவ்வுடலை எப்படி மீட்டெடுப்பது அல்லது தப்பிச் செல்வது என்பதையும் பேசு பொருளாகக் கொண்ட அரசியலே ஆகும். இது தன்னகத்தே மூன்று கூறுகளைக் கொண்டது.

- ஒரு உடலின் இயல்பு என்கிற கட்டமைப்புகளைப் படிப்பது.
- அக்கட்டமைப்புகளை மீறிச்செல்ல முயலும் அவ்வுடலின் எத்தனிப்புகள்.
- உடலை அதிகாரமற்ற வெளியாகக் கட்டமைப்பதற்கான முயற்சிகள். என்கிறார். ஆசிரியரின் இக்கருத்தை அவ்வாறே வெள்ளிவீதியார் பாடல்களில் பொருத்திப்பார்க்கும் முயற்சியே இக்கட்டுரை.

வெள்ளிவீதியார் தனது பாடல்களில் தமது எண்ண உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆயுதமாக உடலைப் பயன்படுத்தியுள்ளமையைக் காணமுடிகிறது. இவர் பயன்படுத்தியுள்ள உவமைகளும், உருவகங்களும் பெரும்பாலும் உடல் உறுப்புகளாக அமைவதைக் காணமுடிகிறது. வெள்ளிவீதியார் தமது பாடல்களில் பயன்படுத்தியுள்ள உடல் உறுப்புகளாவன, கை, கால், வாய், அல்குல், விரல், கண் ஆகியன. இவ்வுறுப்புகளின் செயல்பாடுகளின் வாயிலாகக் கவிஞர் தனது அதிகாரமற்ற நிலையை அல்லது இயலாமையைப் பதிவு செய்வதைக் காணலாம். ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட வெள்ளிவீதியாரின் பாடல் வரிகளாவன,

***விரல்கவர்ந்து உழந்த கவர்வின் நல்யாழ்***
***-(நற்றினை; 335)***

***காலே பரிதப் பினவே கண்ணே***
***நோக்கி நோக்கி வாளிழந்தனவே***
***- (குறுந்தொகை; 44)***

***கையில் ஊமன் கண்ணிற் காக்கும்***
***வெண்ணெய் உணங்கல் போலப்***
***- (குறுந்தொகை; 58)***

***சுரஞ்செல் யானைக் கல்உறு கோட்டின்***
***தெற்றென இறீஇயரோ ஐய மற்றுயாம்***
***நும்மொடு நக்க வால்வெள் எயிறே***
***- (குறுந்தொகை; 169)***

ஆகியவை ஆகும். இப்பாடல் வரிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள உறுப்புகளையும், சூழலையும் 'ஜமாலனின்' உடல் அரசியல் கூறுகளோடு பொருத்திப் பார்க்கும் போது.,

## உடலின் இயல்பு கட்டமைப்பு

மேற்கூறிய பாடல்வரிகளில் விரல் யாழ் மீட்டப் பயன்படுகிறது. கால்கள் நடக்கவும், கண்கள் பார்க்கவும் பயன்படுத்தப்படுகிறது. கையில்லாத ஊமன் ஆகையால் தனது கண்களால் வெண்ணெய்யைப் பாதுகாக்கிறான். பற்கள் சிரிக்க பயன்படுத்தப்படுகிறது. இவ்வரிகள் அனைத்திலும் அவ்வெவ்வுறுப்புகள் அதன் தன்மைகளுக்கு ஏற்ற வேலைகளைச் செய்கின்றன.

### கட்டமைப்புகளை மீறிச்செல்ல முயலும் அவ்வுடலின் எத்தனிப்புகள்

வெள்ளிவீதியாரின் மேலே குறிப்பிடப்பட்ட பாடல் வரிகளில் பயன்படுத்தப்பட்ட உடல் உறுப்புகள் அனைத்தும் அதன் இயல்பை மீறத்துணியும் தன்மையினைக் காண முடிகிறது. விரல் கவர்ந்து உழந்த கவிர்வின் நல்யாழ் என்ற வரிகளில் தலைவன் பிரிவின் பொருட்டு வாடும் தலைவி தனது சிந்தனையை மாற்ற யாழ் மீட்டுகிறாள். யாழ் மீட்டி மீட்டி தலைவியின் விரல்கள் வலுவிழந்து போகும் தன்மையைக் காணமுடிகிறது. இதே போன்று குருந்தொகை 44 வது பாடலில் கால்கள் நடந்து நடந்து வலுவிழந்து போவதையும் கண்கள் பார்த்துப் பார்த்து ஒளிகுன்றிப் போவதையும் காணமுடிகிறது. குறுந்தொகை 58 வது பாடலில் செயல்பட இயலாத கையையும், பேசஇயலாத வாயையும் காண்கிறோம். மேலும் இப்பாடலில் செயல்படும் கண்ணும் பயனற்றதாகவே அமைகிறது. குறுந்தொகை 169வது பாடலில் உம்மோடு சிரித்த பற்கள் பாலை நிலத்தில் செல்லுகின்ற யானையினது, மலையைக் குத்திய கொம்பைப் போன்று விரைந்து கெடுவதாக என பற்கள் கெடவிரும்பும் தன்மையைக் காணமுடிகிறது. இவ்வுறுப்புகள் அனைத்தும் அதன் இயல்புத் தன்மையை மீறி அதிகமாக செயல்படுபவையாகவும், செயல்பட முடியாத தன்மையுடையாகவுமே மேற்கண்ட வரிகளில் அமைவதைக் காணலாம். அதிகமாகச் செயல்பட்டுக் கெட்டுப்போதல் என்பது இயல்புத் தன்மையை மீறுவதால் ஏற்படும் விளைவாகக் காண இடமுண்டு.

### உடலை அதிகாரமற்ற வெளியாகக் கட்டமைக்கும் முயற்சிகள்

மேலே கூறப்பட்ட பாடல் வரிகள் அனைத்திலும் உடல் உறுப்புகள் இயல்பை மீறிக் கெட்டுப்போவதன் வாயிலாக அதன் இயலாமையைப் பதிவு செய்கிறார் கவிஞர். விரல்கள் யாழ் மீட்டும் சக்தியற்றதாகிறது. கால்கள் நடக்கும் வலுவை இழக்கின்றன. கண்கள் பார்க்கும் தன்மையை இழக்கின்றன. பற்கள் சிரிக்கும் தன்மையை இழக்க எத்தனிக்கின்றன. இந்த இயலாத தன்மைகளின் அடிப்படையில் பார்த்தால், அங்கு செயல்பாட்டுக்கான அதிகாரம் இல்லை. இயலாமை என்பது அதிகாரமற்ற தன்மையை உணர்த்தும் அல்லது குறிக்கும் என்பதில் ஐயம் இல்லை. எனவே இவ்வுடல் (உறுப்புகள்) அதிகாரக் கட்டமைப்புகளினால் பயனற்ற நிலையில் இருப்பதைக் கவிஞர் சுட்டிக் காட்டுவதாகக் கொள்ள இடமுண்டு. மேற்கண்ட மூன்று படிநிலைகளின் அடிப்படையில் பெண் உடல் அதிகாரக் கட்டமைப்புகளின் காரணமாக செயல்பட இயலாத் தன்மையில் உள்ளதை வெள்ளிவீதியாரின் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

### உடல் எனது உரிமை

உடலரசியலின் மற்றொரு முக்கிய கூறு அல்லது தன்மை தன் உடலை முன்னிலைப்படுத்தி உரிமை கோருவது. இன்று இந்தியச் சூழலில் ஒடுக்கப்பட்டவர்களின் பல போராட்டங்களும் உடலை முன்னிறுத்தியே அமைகிறது. இதன் அடிப்படையில் வெள்ளிவீதியாரின் சில பாடல்களை ஆராய்வோமாகில் அது பல புதிய பக்கங்களை நமக்குக் காட்டுகிறது. குறுந்தொகை 27வது பாடல்,

**கன்று முண்ணாது கலத்தினும் படாது**
**நல்லான் தீம்பால் நிலத்துஉக் காஆங்**
**கெனக்கு ஆகா தென்னெக்கு முதவாது**
**பசலை உணீஇயர் வேண்டும்**
**திதலை அல்குல்என் மாமைக் கவினே**

இப்பாடலின் பொருள் நல்ல பசுவின் இனிமையான பால் கன்றுக்கும் உதவாமல் கலத்திலும் சேகரிக்கப்படாமல் நிலத்தில் வீணாய் சிந்துவதைப் போல, எனக்கும் உதவாமல் என் தலைவனுக்கும் உதவாமல் எனது தேமல் நிறைந்த அல்குல் பசலை படர்ந்து வீணாகிறது என்பதாகும். இப்பாடலில்

கன்று தலைவிக்கு உவமையாகவும் கலம் தலைவனுக்கு உவமையாகவும் பால் காமத்திற்கு உவமையாகவும் குறிப்பிடப்படுகிறது.

**கன்று= தலைவி**

**கலம்= தலைவன்**

**பால் = காமம்**

தாயிடம் பால் குடிக்கும் உரிமை கன்றுக்கே அதிகம். கன்று குடித்தது போக மீதமுள்ள பாலே கலத்தில் சேகரிக்கப்படும். எனது அல்குல் எனக்கும் ஆகாது என் தலைவனுக்கும் ஆகாது என தலைவி தன்னலத்தையே முன்னிலைப் படுத்துகிறாள். இங்கு எனது தேவைக்கு அடுத்துதான் என் தலைவனுக்கு என்ற பார்வையை உவமைகளோடு ஒப்பிட்டு அறியமுடிகிறது. இப்பாடலில் பால் காமத்துக்கு உவமையாகக் குறிக்கப்படுகிறது. பால் ஒரு நுகர்வுப் பொருள் ஆகும். பால் தாயிடம் இருக்கும் அதே தன்மையில் கன்றால் நுகரப்படுகிறது. ஆனால் கலத்தில் சேகரிக்கப்பட்ட பாலின் பயன்பாடு அதன் சூழலைப் பொருத்து மாறுவதைக் காணலாம். அது தயிராகவும், மோராகவும், டீயாகவும் பயன்படுத்தப்படலாம். அதேபோன்று காமமும் தலைவியின் சுய இன்பம் பொருட்டு அமையும் போது அது நிறைவானதாக (உடலளவிலும், மனதளவிலும்) அமைகிறது. ஆனால் அது தலைவனுடன் கூடும் போது தலைவனின் நிறைவைப் பொறுத்தே அமைகிறது. எனவே இப்பாடலில் தலைவியின் சுய இன்பமும் அதன் முக்கியத்துவமும் குறிப்பாக உணர்த்தப்படுவதைக் காணலாம்.

தன்மை சுட்டி பின் முன்னிலை சுட்டுவது வழக்கம் எனக்கொண்டாலும், அதன் நுகர்வுத் தன்மை அடிப்படையில் தலைவி தன் உடல் மீது தனக்கே உரிமை அதிகம் எனக்கூறும் ஒரு உரிமை கோரலைக் காணமுடிகிறது. அது மட்டுமின்றி பெண் காமத்தை அடக்கும் தன்மை உடையவளாக இருக்க வேண்டும் என்ற கட்டமைப்பை மீறுவதையும் காணலாம்.

இதே போன்று, நற்றிணை 335வது பாடலில் காமம் பெரிதே; களைஞரோ இலரே! எனத் தனது காமத்தைப் போக்குவார் யாருமில்லையே என்று அதிகாரம் வகுத்துள்ள உடல் கட்டுப் பாடுகளை மீறத்துணியும் போக்கையும் காண்கிறோம்.

## முடிவுரை

1. வெள்ளிவீதியார் பாடல்கள் பலவற்றிலும் காமம் செப்பல் பெண்டிற்கில் என்ற மரபை மீறும் தன்மையைக் காணமுடிகிறது.
2. தனது உடல் மொழியால் உணர்வுகளையும் தனது இயலாமையையும் வெளிப்படுத்தும் போக்கைக் காணமுடிகிறது.
3. மறுக்கப்பட்ட பெண் வெளியை அடைய முயலும் தன்மையைக் காணமுடிகிறது.
4. உடல் உறுப்புகள் இயல்பை மீறத்துணியும் தன்மையில் அமைக்கப்பட்டுள்ளன.
5. வெள்ளிவீதியார் பாடல்களில் சுயம் அதிகமாகப் பேசப்படுகிறது.
6. சங்ககால பெண் உடலரசியலில் வெள்ளிவீதியார் தவிர்க்க இயலாத கவிஞராக உலா வருகிறார்.

## மேற்கோள்கள்

1. பெண் உடலரசியல் - முனைவர் அரங்கமல்லிகா (thoomai.wordpress.com)
2. நவீன தொன்மங்களும் நாடோடிக் குறிப்புகளும் - ஜமாலன்.

## பார்வை நூற்கள்

1. நவீனத் தொன்மங்களும் நாடோடிக் குறிப்புகளும்.
2. குறுந்தொகை - கழக வெளியீடு.
3. நற்றிணை - கழக வெளியீடு.
4. காந்தியின்உடலரசியல்-இராமானுஜம்.
5. பெண்ணியப் பார்வை - க. பரிமளம்.
6. Thoomai.wordpress.com.